***117 வினா.**—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகர மன்றம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விஸ்தரிக்க மாநில சர்க்காரிடம் கடன் கோரி உள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

(உ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை கோயம்புத்தூர் நகரசபை சாக்கடைத் திட்டத்திற்காக சர்க்காரிடம் 5 லட்சம் ரூபாய் கடன் கோரி மனுச் செய்திருந்தது. அதன் பேரில் சர்க்கார் இதற்கென ரூ. 2,50,000 கடன் வழங்கியுள்ளது.

திரு. சு. துரைசாமி : கோவை நகரத்தில் ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்கட் தொகை இருக்கிறது. அது ஒரு பெரிய தொழில் நகர்மாக இருப்பதால் அங்கு ஏராளமான தொழிலாளர்கள் வந்து போகிறார்கள். ஆகவே, அந்த நகர மன்றம் கேட்டிருக்கிற ஐந்து லட்சம் ரூபாய் கடன் தொகையைக் கொடுத்து, நகரம் முழுவதும் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித்தர அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேவையான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : பாதாள சாக்கடைத் திட்டம் மாநிலம் பூராவும் விஸ்தரிக்கப்படவேண்டும். நம் மாநிலத்தில் வேறு எந்த எந்த நகர மன்றங்களிலிருந்து பாதாள சாக்கடைத் திட்டம் குறித்து அரசாங்கத்திற்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன ? அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றி விவரம் இல்லை.

Dr. H. V. HANDE : Sir, in the Coimbatore City vast areas are now without proper drainage. Representations in regard to this matter have been made for a number of years. In view of these things, will the Government let us know the exact amount that they have earmarked for the Drainage Schemes in the entire State and whether priority could be given to the Coimbatore Drainage Scheme and implemented earlier than other drainage schemes ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கோவையில் கீழ் சாக்கடைத் திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற விவரமும், அதில் ஏற்கெனவே ஒரு பகுதி முடிந்து இரண்டாவது பகுதி நடந்துகொண்டிருக்கிற விவரமும், சாக்கடைத் தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பது பற்றியும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ? சாக்கடைத் தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய நிலங்களைச் சர்க்கார் உடனடியாக வாங்கிக் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Coimbatore Municipality has been divided into three zones for the purpose of providing sewerage system. There is a drainage scheme for Zone I and it is functioning. In March, 1962, sanction was accorded for sewering Zone II of the Municipality, at an estimated costof Rs. 46·65 lakhs. The land originally earmarked for locating a sewerage farm has been acquired by the State Housing Board for the development of new housing colonies. As new colonies have come up the drainage scheme has to be extended to these areas also. So the Chief Engineer, P.H.E. & M.W. submitted to the Government revised proposals for sewering Zone II of the Municipality suggesting the disposal of sewage after full treatment at the existing treatment plant at Valankulam tank. The revised estimate for Rs. 67·62 lakhs for the scheme was approved on full loan basis in November 1965.

The Chief Engineer has given technical sanction for sewering blocks Nos. 1, 2, 3 and 3A and for laying trunk sewers and treatment works. Laying of sewers in blocks 1 and 2 has been completed and 50 per cent of the sewer-laying works have been completed. The work of laying trunk sewers and treatment works are being taken up for execution. Land required for treatment work has been acquired. Tenders are being invited for trunk sewers.

திரு. இரா. மாணிக்கவாசகம் : கோவை பாதாள சாக்கடைத் திட்டம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது ? அதில் எவ்வளவு முதலீடு செய்யப் பட்டது ? எந்த அளவு செலவு செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே படித்த குறிப்பில் இந்த விவரமும் இருக்கிறது.

திரு. முனு. ஆதி : பாதாள சாக்கடைத் திட்டம், கோவை போன்ற முதல்தர நகரத்திற்கே இந்த நிலை என்றால், எங்களுடைய நகர சாக்கடைத் திட்டத்திற்கு எந்த ஆபத்தோ, தெரியவில்லை. ஆகவே முதல்தர நகரமன்றத்திற்கு முதற்சலுகையும், இரண்டாந்தர நகர மன்றத்திற்கு இரண்டாந்தரச் சலுகையும் அளிக்கும் வகையில் அரசாங்கமே முன் நின்று ஒரு திட்டத்தை தீட்டி, அதன் மூலம் அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த நகரத்திற்கும் எந்த விதமான ஆபத்தும் இல்லாத முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரை நகரம் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாகும். அங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தை நகரசபை நிறைவேற்றினாலுங்கூட, சூபரின்டெண்டிங் இன்ஜினீயரின் அனுமதியின் பேரில்தான் அது நடக்கவேண்டும். அவர் அனுமதிப்பது கிடையாது. ஆகவே, அந்த நகரம் போன்று இருக்கிற இடத்தில் இன்ஜினீர் அவர்கள் பார்த்து அங்கே ஒரு பாக்கட் ஸ்கீம் போட்டு, நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று வந்தால், அதை எஸ்.ஈ. அனுமதிக்கவேண்டும் என்ற முறையில் அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் அளிக்கலாம்.